**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.82/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஷாஜகான் | தொழில் | : ஆட்டோ ஓட்டுநர் |
| தகப்பனார் பெயர் | : பாபுசாகிப் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : மஞ்சநாயக்கன்பட்டி | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 21.08.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கதவு எண்.2/156ல் பழனியப்பா நகர், மஞ்சநாயக்கன்பட்டியில் வசிக்கும் பாபுசாகிப் மகன் சுமார் 48 வயதுள்ள ஷாஜகான் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் கூடுதல் முதன்மை சாட்சியம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் கடந்த 20.07.2026ம் தேதி எனது தரப்பில் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். இன்று எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 2005-2009 | வாதியின் ஆதார் அட்டை – சான்றொப்பமிடப்பட்டது. | வா.சா.ஆ.1 |
| 02 | 13.08.2010 | பாப்புசாகிப் என்பவரின் இறப்பு சான்றிதழ் – உண்மை நகல் | வா.சா.ஆ.2 |
| 03 | 15.11.2021 | பாப்புசாகிப் வாரிசு சான்று – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| 04 | 18.10.2023 | 01.01.1975 முதல் 17.10.2023 வரையிலான தாவா சொத்து குறித்த வில்லங்கம் ஏதும் இல்லை என்ற சான்று – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.4 |
| 05 | 21.04.1960 | பாகப்பிரிவினை பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.5 |
| 06 | 16.10.2023 | பட்டா எண்.1626 நத்தம் நிலவரி திட்டம் பட்டா – உண்மை நகல் | வா.சா.ஆ.6 |
| 07 | 31.10.2023 | சர்வே எண்.429 புல வரைபடம் – உண்மை நகல் | வா.சா.ஆ.7 |
| 08 | 05.04.2013 | தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீது – அசல் | வா.சா.ஆ.8 |
| 09 | 14.10.2005 | பாப்புசாகிப் பெயரில் உள்ள தண்ணீர் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கைகள்) – அசல் | வா.சா.ஆ.9 |
| 10 | 02.10.2023 | புகார் மனு ரசீது – அசல் | வா.சா.ஆ.10 |
| 11 | --- | வம்சாவழி பட்டியல் | வா.சா.ஆ.11 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.21 18:19:14 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்